## பகுதி 5—சிறையிருப்பிலிருந்து திரும்புதல்

### *பாடம் 1—மீட்டுத்திருப்புதலுக்கான தேவை*

**குறிக்கோள்:** தேவன் மீட்டுத்திருப்புதலின் தேவன் என்பதையும், அவர் தம் குறிக்கோளை நிறைவேற்றுவார் என்பதையும் புரிந்துகொள்வது.

**பொருட்சுருக்கம்:** தம் குறிக்கோளை நிறைவேற்றவேண்டுமென்ற தேவனுடைய நிர்ணயம் அவருடைய ஒரு குணாதிசயமாகும். அவர் சூழ்நிலையை தம் பொருளாட்சியின் கோட்டிற்கு திரும்பவும் கொண்டுவர, விரக்தியுண்டாக்குகிற சூழ்நிலைகளின்மத்தியிலும் அவர் மீட்டுத் திருப்புதலின் தேவனாக மீண்டும் மீண்டும் வந்திருக்கிறார். தேவன் இஸ்ரவேல் மக்களை தம் ராஜ்யத்திற்காக தம்மோடு வசிக்கும்படி நல்ல தேசத்திற்குள்ளாக வழிநடத்தினார். இருப்பினும், இஸ்ரவேல் மக்கள் இந்த ஆசீர்வாதமான நிலையில் தொடர்ந்து இருப்பதற்குப்பதிலாக, விக்கிரக ஆராதனையினிமித்தம் சீரழிந்து, பிரிந்துபோனார்கள். இறுதியில், இஸ்ரவேல் மக்கள் நல்ல தேசத்திலுள்ள தங்கள் ஆசீர்வாதமான பங்கை இழந்து, சிறையிருப்புக்குள் கொண்டு செல்லப்பட்டார்கள், நகரமும் ஆலயமும் அழிக்கப்பட்டன. எனவே, மீட்டுத்திருப்புதலுக்கான தேவை ஏற்பட்டது. ஆலயமும் நகரமும் மறுபடிகட்டப்படக்கூடியதும், நல்ல தேசத்தில் தம் மக்கள் மறுபடியும் ஸ்தாபிக்கப்படக்கூடியதுமான தளத்திற்கு தம் மக்களை மீட்டுத்திருப்பி கொண்டுவர, தேவன் மீட்டுத்திருப்புதலின் தேவனாக மீண்டும் வந்தார். பழைய ஏற்பாட்டில் உள்ள இந்த சித்திரத்தின் நிஜம் இன்று கிறிஸ்துவின் சரீரமாக சபை கட்டியெழுப்பப்படுவதில் இருக்கிறது. தேவன் ஒரு கூட்டு வாசஸ்தலத்தை விரும்புகிறார், ஆனால் அவருடைய மக்கள் சீரழிந்து, பிரிவினைகளுக்குள்ளாக கொண்டுசெல்லப்பட்டுவிட்டார்கள். அவர் தம் மக்களை ஒருமையின் தளத்திற்கு திரும்பவும் மீட்டுத்திருப்பி, அவர்களை தம் சரீரமாக சேர்த்து கட்டிக் கொண்டிருக்கிறார். இன்று இந்த வேலைக்காக நாம் அவருடன் நிற்க சித்தமாயிருக்கிறோமா?

**பின்புலம்:** மீட்டுத்திருப்புதல் என்னும் கருத்து வாலிபர்களுக்கு தொடர்ச்சியான உறுதியை அளிக்கவேண்டும். சேதப்படுத்தப்பட்டதை மீட்டுத்திருப்பி, மறுசீரமைப்பதே ஒவ்வொரு வாலிபனிடத்திலும் வேலைசெய்வதில் தேவனுடைய அடிப்படை தத்துவமாக இருக்கிறது. இந்த யுகத்தில் அவருடைய அன்பு எந்த வரம்புகளையும் அறிவதில்லை. நம்மை வந்தடையவும், நம்மை ஆதாயப்படுத்தவும் தம்மால் முடிந்த எல்லாவற்றையும் அவர் செய்துகொண்டிருக்கிறார், செய்வார்.

**அதிகாரங்கள்:** எஸ்றா 1—3.

**போதிக்கவேண்டிய உண்மைகளுடன்கூடிய செய்திக்குறிப்பு:**

**I. தேவன் மீட்டுத்திருப்புதலின் தேவனாக இருக்கிறார்—ஆதி. 1:1-3; எஸ். 9:9**

*வேதாகமத்தில், தேவன் குறிக்கோளின் தேவனாகவும், மீட்டுத்திருப்புதலின் தேவனாகவும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறார். தேவன் தம் குறிக்கோளுக்காக வானங்களையும் பூமியையும் சிருஷ்டித்தார் என்று ஆதியாகமத்திலுள்ள முதல் வசனம் நமக்கு சொல்லுகிறது. சாத்தானுடைய கலகத்தின் விளைவாக பூமி பாழானது என்பதை இரண்டாம் வசனம் வெளிப்படுத்துகிறது. இருப்பினும், தேவன் கைவிடுவதற்குப்பதிலாக, பூமியை மறுசீரமைத்து, தம் வெளியாக்கத்திற்காக மனிதனை சிருஷ்டித்தார். மனிதன்மூலம் பூமியில் கூட்டு வெளியாக்கத்தை பெறுவதே தேவனுடைய நோக்கமாக இருந்தது. எனினும், சீக்கிரத்தில், தேவன் தம் குறிக்கோளுக்காக சிருஷ்டித்த மனிதன் பாவத்தினால் பாழாக்கப்பட்டு, தேவனைப்பொறுத்தவரை தொலைந்துபோனான். ஆதாமுக்கும் ஏவாளுக்கும் தோல் உடைகளை உண்டாக்கி, மிருக பலியின் இரத்தத்தினால் மனிதனின் பாவங்கள் மூடப்படுவதற்கான வழியை அளித்து சூழ்நிலையை மறுசீரமைக்க தேவன் மீண்டும் வந்தார். எனினும், மனிதன் தொடர்ந்து விழுந்துபோனான், இறுதியில் முழு மனித இனமும் மாம்சமாக மாறியது. மேலும், விழுந்துபோன தூதர்கள் மனிதர்களிடையே மனைவிகளை கொண்டு, மனித இனத்திற்குள் பொல்லாத கலப்படம் அறிமுகமாகும்படிச் செய்தார்கள். இருப்பினும், தேவன் வெள்ளத்தின்மூலம் கலப்படத்தை சுத்திகரித்து, நோவாவின்மூலமாகவும் அவனுடைய குடும்பத்தின்மூலமாகவும் மீண்டும் பூமியை*

*மீட்டுத்திருப்பி, அதை மறுபடியும் மக்களால் நிரப்பினார். இது மீட்டுத்திருப்புதலின் கூடுதல் படியாகும். வரலாறுதோறும், தேவன் மனிதனை தம் குறிக்கோளிடம் மீட்டுத்திருப்ப மீண்டும் மீண்டும் வேலைசெய்திருக்கிறார்.*

**II. பூமியில் தம் கூட்டு வெளியாக்கமாக இருக்கும்படி, தேவன் ஆபிரகாமில் ஒரு புதிய இனத்தை தேர்ந்தெடுத்தார்**

**A. தேவன் ஆபிரகாமை தேர்ந்தெடுத்து, விக்கிரகங்களின் தேசத்தைவிட்டு, தேவனுடைய மக்களாக இருக்கும்படி ஆபிரகாமின் சந்ததி உடைமையாக்கப்போகிற தேசத்திற்கு அவர் அவனை அழைத்தார்—ஆதி. 12:1-3; 13:14-17**

*நோவாவின் சந்ததியாரும் விழுந்துபோனார்கள், பூமியின் எல்லா மக்களும் விக்கிரகளின்பின்னால் போனார்கள். நாம் தேவனாக இருந்திருந்தால், "அவ்வளவுதான்! போதும்! என் பொறுமை தீர்ந்துவிட்டது! நான் சிருஷ்டித்த மனிதனை நான் கைவிடுகிறேன்!" என்று நாம் சொல்லுவோம். இருப்பினும், கைவிடுதல் என்பது தேவனுடைய சுபாவத்தில் இல்லை. கர்த்தரை துதியுங்கள்! அவர் தம் இலக்கை அடைய நிர்ணயித்துவிட்டார், அவர் அதை அடைவார். எனவே, ஒரு புதிய இனத்துடன் ஒரு புதிய ஆரம்பம்கொள்ள, ஆபிராம் என்ற பெயருடைய (பிற்பாடு ஆபிரகாம் என்று அழைக்கப்பட்ட) ஒரு மனிதனை தேவன் தேர்ந்தெடுத்து, அவனை அழைத்தார். ஆபிரகாமின் சந்ததியாகிய இஸ்ரவேல் மக்களின்மூலம் தேவன் தம் ராஜ்யத்திற்காகவும், வெளியாக்கத்திற்காகவும் பூமியில் ஒரு பாதப்படியை மீட்டுத்திருப்பும்படி நிர்ணயம் பண்ணினார். ஆகவே, ஆபிரகாமின் சந்ததியார் ஒரு தேசத்தில் குடியேறுவார்கள் என்று தேவன் ஆபிரகாமுக்கு வாக்களித்தார், அதில் அவர்கள் அவருடைய சாட்சியாக, அதாவது அவருடைய கூட்டு வெளியாக்கமாக இருப்பார்கள்.*

**B. ஆபிரகாமின் சந்தியாருக்கு தேவன் நல்ல தேசத்தை கொடுத்தார், ஆனால் அவர்கள் தொடர்ச்சியாக தேவனைவிட்டு திரும்பி, விக்கிரகங்களுக்குப்பின்னால் சென்றார்கள், இதன் விளைவாக, அவர்கள் நல்ல தேசத்தைவிட்டு வெளியே கொண்டுசெல்லப் பட்டார்கள்—நெகே. 9:24-30; 2 நாளா. 36:14-16**

**1. தேவன் எகிப்தைவிட்டு இஸ்ரவேல் மக்களை வெளியே அழைத்து, அவர்களை நல்ல தேசத்திற்குள் கொண்டுவந்தார்—யாத். 6:6-8**

*ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோர் மரித்தபின்பு, அவர்களின் சந்ததியார் எகிப்தில் பிடித்துவைக்கப்பட்டிருந்தார்கள். மீண்டும் தேவன் மீட்டுத்திருப்புதலின் தேவனாக வந்து, அவர்களை வெளியே கொண்டுவந்து, நியாயப்பிரமாணத்தின் உடன்படிக்கையை அவர்களுக்கு தந்தார். இப்பேர்ப்பட்ட ஆச்சரியமான தேவனால் எகிப்திலுள்ள அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டவர்களாக இஸ்ரவேல் மக்கள், ஒரு மகிமையான எதிர்காலத்தை எதிர்நோக்கியிருப்பதற்கு எல்லா காரணமும் இருந்தது. உதாரத்துவமும் ஐசுவரியங்களும் நிறைந்த தேசத்திற்குள் தேவன் அவர்களை கொண்டுவந்திருந்தார். அவர்கள் செய்யவேண்டியதெல்லாம், தேவனுக்கு உண்மையாயிருப்பதும், அவருடைய கட்டளைகளை கைக்கொள்வதும் மட்டும்தான். அதற்குப்பதிலாக, அவர் அவர்களுடைய புதிய தேசத்தில் அவர்களை ஆசீர்வதித்து, அவர்களுடன் வசித்து, எல்லா எதிரிகளிடமிருந்தும் அவர்களை பாதுகாப்பார். பூமி முழுவதும்கூட, அவர்கள்மூலம் ஆசீர்வதிக்கப்படும். இதைவிட சிறந்த நிலைமையை யாரால் கற்பனைசெய்துபார்க்கமுடியும்?*

**2. எனினும், இஸ்ரவேல் மக்கள் விக்கிரகங்களின்பின்னால் சென்று, பிரிந்து போனார்கள்—1 இராஜா. 12:26-30; 2 நாளா. 11:1-16; 13:5-11**

*இஸ்ரவேல் மக்கள் தேவனுக்கு உண்மையாயிருப்பதற்குப்பதிலாக, விக்கிரகங்களை பின்தொடரும்படி திரும்பத்திரும்ப தேவனைவிட்டு திரும்பினார்கள். இறுதியாக, தேசத்தில் எருசலேமுக்குப்பதிலான போலிகளாக விக்கிரக ஆராதனை மையங்கள் நிறுவப்பட்டு, தேவனுடைய மக்கள் இரண்டு ராஜ்யங்களாக பிரியும்படிச்செய்தன. (இன்னும் இஸ்ரவேல் என்று அழைக்கப்பட்ட) வடக்கு ராஜ்யம் தேவனுக்கு*

*அக்கறைசெலுத்தாத ராஜாக்களால் ஆளப்பட்டது; அவர்கள் விக்கிரக ஆராதனை மையங்களுக்கு துணைபோனார்கள், தேவன் ஆராதிக்கப்படவேண்டிய அவருடைய ஒப்பற்ற மையமாக அவர் தெரிந்துகொண்ட இடமாக எருசலேமை அங்கீகரிக்க மறுத்துவிட்டார்கள். தெற்கு ராஜ்யம் (யூதா) தாவீதின் சந்ததியாரால் எருசலேமிலிருந்து ஆளப்பட்டது. சிறிய தேசத்திலுள்ள ஒரு சிறிய கூட்டமாக இருந்தாலும், யூதாவில், தேவனுடைய விருப்பத்தின்படி தேசத்தில் அவரை அனுபவித்துமகிழ்ந்த மக்கள் தேவனுக்கு இன்னும் இருந்தார்கள். பூமியில் தேவனுடைய வெளியாக்கம் வளர்வதற்குப்பதிலாக, சுருங்கிக்கொண்டிருந்தது!*

3. **இறுதியில், இஸ்ரவேல் மக்கள் மிகத்தாழ்வான நிலைமைக்கு மூழ்கிப்போய், தங்களுக்குமுன்பு அந்த தேசத்தில் வாழ்ந்த கானானியரைவிட எவ்விதத்திலும் வித்தியாசமில்லாதவர்களாக மாறினார்கள்—2 இராஜா. 17:7-23**

*இறுதியாக, இஸ்ரவேல் மக்கள் விக்கிரகங்களுக்குப்பின்னால் செல்வதில், மனிதரை பலிசெலுத்துவதையும், வேசித்தனத்தையும், பில்லிசூனியத்தையும், கொலையையும், சொல்லமுடியாத, வன்முறையான எல்லாவிதமான செயலையும் செய்தார்கள் (எரே. 32:35; 2 இராஜா. 17:7-23). அவர்களுடைய வாழ்வு, அவர்களுக்குமுன்பாக கர்த்தர் விரட்டிய மக்களுடைய வாழ்விலிருந்து வேறுபடுத்திப்பார்க்கமுடியாததாக மாறியது. அதிக நேர்மறையான தெற்கு ராஜ்யமாகிய யூதாவிலும்கூட, விக்கிரக ஆராதனை தொடர்ச்சியாக ஊர்ந்துவந்தது, வடக்கிலுள்ள நிலைமையைப்போல விழுந்துபோனதாக மாறும்வரை, அங்குள்ள நிலைமை சரிந்துகொண்டேபோனது (2 இராஜா. 16:1—17:19). பூமியில் தேவனுடைய கூட்டு வெளியாக்கம் முற்றிலும் தொலைந்துபோனதுபோல் இருந்தது.*

4. **தெரிந்துகொள்ளப்பட்ட இனம் சிறையிருப்புக்குள் கொண்டுசெல்லப்பட்டது—2 இராஜா. 24—25; 2 நாளா. 36:1-21**

*தம் மக்கள் கைப்பற்றப்பட்டு, சிறையிருப்புக்குள்ளாக கொண்டுசெல்லப்படும்படி தேவன் அனுமதித்தார். முதலில் வடக்கிலுள்ள ராஜ்யம் அசீரியர்களிடம் விழுந்து போனது (2 இராஜா. 18:9-11); அதன்பின் தெற்கு ராஜ்யம் பாபிலோனியர்களிடம் விழுந்துபோனது (2 இராஜா. 24). மக்கள் பாபிலோனுக்கு கொண்டுசெல்லப் பட்டார்கள், அவர்களுக்குப்பதிலாக மற்ற நாடுகளிலிருந்து மக்கள் கொண்டுவரப் பட்டார்கள். எருசலேம் அழிக்கப்பட்டது, ஆலயம் இடித்துப்போடப்பட்டது (2 இராஜா. 25). தேவன் தோற்கடிக்கப்பட்டதுபோல் தோன்றியது, பூமியில் வேறெதுவும் இல்லாததுபோல் தோன்றியது. என்னே பாழான காட்சி! எருசலேமில் களைகள் மிகுதியாய் வளர்ந்துபோயின. தேவனும் மனிதனும் ஒருவரையொருவர் அனுபவித்து மகிழ்ந்த இடமாகிய ஆலயத்தின் மனை குள்ளநரிகளுக்கும் காட்டு மிருகங்களுக்கும் வாசஸ்தலமானது (எரே. 9:11). அநேக "மீட்டுத்திருப்புதலுக்குப்பிறகு," ஒவ்வொரு படியையும் நிறைவேற்ற அநேக போராட்டத்திற்குப்பிறகு, தேவனுடைய சாட்சியும் அவருடைய மக்களிடத்திலுள்ள வாசஸ்தலமும் தொலைந்துபோயின. மக்களும்கூட தொலைந்துபோனார்கள். அவர்கள் ஆசீர்வாதமான தேசத்திலுள்ள தங்கள் நிலைமையிலிருந்து விழுந்துபோனார்கள், இப்போது தூஷணமான, விருத்தசேதனமில்லாத தேசங்களிடையே தேவனைவிட்டு வெகு தூரத்தில் இருந்தார்கள். தேவனோடு ஒன்றாயிருப்பதற்கான வழியும் தொலைந்துபோனது, ஏனென்றால் எருசலேமிலுள்ள ஆலயத்தில் மட்டுமே பலிகள் செலுத்தப்படமுடியும், அது அழிக்கப்பட்டிருந்தது. எல்லாம் நம்பிக்கையற்றதாக தோன்றியது. இதைவிட சோகமான அல்லது ஏமாற்றமளிக்கிற சூழ்நிலையை கற்பனைசெய்துபார்ப்பது கடினம்.*

**C. தேவன் தம் வெளியாக்கத்திற்காக, தம்மை தகுந்தமுறையில் ஆராதிக்கிறவர்களாக இருக்கும்படி, தம் மக்களை தேசத்திற்கு மீட்டுத்திருப்பி, முன்னடையாளத்தின்படி தம் இலக்கை ஆதாயப்படுத்தினார்—எஸ்றா 1:1-4; 2 நாளா. 36:22-23**

*எனினும், தேவன் விட்டுவிடமாட்டார்! அவருடைய குறிக்கோள்தான் அவருக்கு*

*எல்லாம். அவர் தம் நல்லின்பத்தை நிறைவேற்ற, தம் ராஜ்யத்திற்கான இடமாக அவர் தெரிந்துகொண்ட தேசத்திற்கு இஸ்ரவேல் மக்களை மீட்டுத்திருப்பவேண்டியிருந்தது. ஆகவே, மீண்டும் ஒருமுறை அவர் மீட்டுத்திருப்புதலின் தேவனாக மாறினார். ஆலயத்தை மறுபடியும் கட்டும்படி எருசலேமுக்கு திரும்பிச்செல்ல விரும்புகிறவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் திரும்பிச்செல்லலாம் என்று கட்டளை பிறப்பிக்கும்படி அவர்களுடைய புறவின ராஜாவின் ஆவியை தேவன் ஆச்சரியமானவிதத்தில் கிளர்ந்தெழப்பண்ணினார் (எஸ்றா 1:1-4). எருசலேமுக்கு திரும்பிவந்தவர்களின் முதலாவது குழுவை செருபாபேல் வழிநடத்தினான் (எஸ்றா 2:2). அவர்கள் பலிபீடத்தை மறுபடி கட்டினார்கள், ஆலயத்தின் அஸ்திபாரத்தை மறுபடியும் போட்டார்கள் (எஸ்றா 3:2-3, 10). என்னே அற்புதமான காட்சி! ஆவிக்குரிய மண்டலத்தில் நிச்சயமாக சாத்தான் வெட்கத்துக்குள்ளானான், தேவ தூதர்கள் களிகூர்ந்தார்கள்! அதன்பின், தேவனுடைய வார்த்தையைக்கொண்டு மக்களை கட்டியமைக்க, ஆசாரியர்களோடும் லேவியர்களோடும் எஸ்றா வந்தான் (எஸ்றா 7:6-10). கடைசியாக, எருசலேம் நகரம் மறுபடியும் கட்டப்படுவதை மேற்பார்வைசெய்ய நெகேமியா வந்தான் (நெகே. 2:18). எஸ்றா, நெகேமியா ஆகிய புத்தகங்கள் "மீட்டுத்திருப்புதல் புத்தகங்கள்" என்று அழைக்கப்படுகின்றன, ஏனென்றால், தேவனுடைய ஆலயமும், தேவனுடைய ராஜ்யத்தின் மையமாக எருசலேமும், தேவனுடைய பரிசுத்த தேசமாக அவருடைய மக்களும் மீட்டுத்திருப்பப்பட்டதின் நிகழ்வுகளை அவைகள் விவரிக்கின்றன. பூமியில் தேவனை வெளியாக்கிய மக்களிடையே அவர் தம் வாசஸ்தலத்தை மீட்டுத்திருப்பினார். இவ்வாறு, தேவன் தம் இலக்கை அடைவதைப்பற்றிய சித்திரத்தோடு பழைய ஏற்பாட்டின் வரலாறு முடிவடைகிறது.*

## III. புதிய ஏற்பாட்டு யுகத்தில் சபை மீட்டுத்திருப்பப்படுவதே தேவனுடைய மீட்டுத்திருப்புதலின் நிஜம்

### A. பூமியில் தம் மெய்யான வாழ்விடமாகவும், ராஜ்யமாகவும் இருக்கும்படி தேவன் சபையை ஸ்தாபித்தார்—எபே. 1:23; 2:19-22

*ஆலயத்தையும், எருசலேம் நகரத்தையும் தேவன் மீட்டுத்திருப்பியது, அவர் இன்று மீட்டுத்திருப்பிக்கொண்டிருக்கிற கூட்டு வெளியாக்கத்தைப்பற்றிய சித்திரமாக இருக்கிறது. இஸ்ரவேல் மக்கள் தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்படி நடந்துகொள்வதால் முன்னடையாளத்தின்படி தேவனுடைய வெளியாக்கமாக இருக்கமுடிந்தது, ஆனால் சபை நிஜத்தில் தேவனுடைய வெளியாக்கமாக இருக்கமுடியும், ஏனென்றால் ஒவ்வோர் அவயவமும் தேவனையே ஜீவனாக உள்ளடக்கியிருக்கிறார்கள். இவ்விதமாக, தேவன் தம் மெய்யான வெளியாக்கத்தை மனுஷீகத்தில் பெறமுடியும். சபையாகிய இந்த கூட்டு வெளியாக்கம் எருசலேமிலிருந்து தொடங்கி, பூமிமுழுவதும் பரவும் என்று தேவன் உத்தேசித்தார். இறுதியாக, புதிய வானத்திலும் புதிய பூமியிலும் கர்த்தருடைய நிறைவான வெளியாக்கத்திற்காக சபைகள் புதிய எருசலேமில் முழுநிறைவடையும். தேவன் தம் விருப்பத்தை முழுவதுமாக நிஜமாக்குவார், அவருடைய குறிக்கோள் முழுவதுமாக நிறைவேற்றப்படும்.*

### B. சபை சீரழிவுக்குள்ளும் பிரிவினைக்குள்ளும் விழுந்துபோனது—1 கொரி. 1:10-13; 3:3-10

*எனினும், சீக்கிரத்தில் சபை சீரழிவுக்குள் விழுந்துபோனது. நற்கிரியைகள், செத்த அறிவு, குருமரபினர்-பாமரர் அமைப்புமுறை, மூடநம்பிக்கை போன்ற காரியங்கள் கிறிஸ்துவின் இடத்தை எடுத்துக்கொள்ளும்படி உள்ளே வந்தன. சபை கிறிஸ்துவல்லாத மற்ற காரியங்களிடம் திரும்பி, இஸ்ரவேல் தேசம் செய்ததுபோலவே, பிரிவினைக்குள் விழுந்துபோனது. இறுதியில், இவைகள் ஒருமையின் நேர்த்தியான தளத்திலிருந்து, இன்றைய கிறிஸ்தவத்தையாக்குகிற எல்லா பிரிவினைகளுக்கும் தேவனுடைய மக்களை கொண்டுசென்றுவிட்டன. வேதாகமத்தில், கிறிஸ்தவம் மகா பாபிலோன் என்று அழைக்கப்படுகிறது (வெளி. 17:5). தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்கள் சரீரத்தின் ஒருமையிலிருந்து கொண்டுசெல்லப்பட்டு, அநேக வெவ்வேறு கிறிஸ்தவ*

*குழுக்களிடையே சிதறிக்கிடக்கிறவரை, அவர்கள் அவருடைய கூட்டு வெளியாக்கமாக இருப்பதற்கு எந்த வழியும் இல்லை. இருப்பினும், நாம் கிறிஸ்தவத்தில் இல்லாதவரை, எல்லாம் சரியாகத்தான் இருக்கிறது என்று நாம் நினைத்துக்கொள்ளக்கூடாது. கிறிஸ்துவல்லாத வேறு எதையாவது (பணம், கல்வி, அந்தஸ்து, சிற்றின்பம், பொழுதுபோக்கு போன்றவைகளை) நாம் பின்தொடர்ந்தால், நாம் கிறிஸ்துவை வெளியாக்கமாட்டோம். இப்படிப்பட்ட பின்தொடர்தல் விக்கிரக ஆராதனையாகிறது, இது கிறிஸ்துவைவிட்டு நம்மை விலக்கிக்கொண்டுசெல்லமுடியும். விக்கிரக ஆராதனை நம் இருதயத்தை ஆக்கிரமித்துவிட்டால், வரப்போகிற யுகத்தில் தேவனால் நம்மை மீட்டுத்திருப்பமுடியும், ஆனால் இன்று அவருடைய திட்டத்திற்காக நம் இருதயம் காக்கப்படுமாறு, இன்று நாம் அவருடன் ஒத்துழைப்பது சாலச்சிறந்தது.*

### C.கர்த்தர் சபையை மீட்டுத்திருப்ப வந்தார்—எஸ்றா 3:1, 10-12

*மார்டின் லூதரின் காலத்திலிருந்து, சத்தியத்தையும் சபைவாழ்க்கையையும்பற்றிய பல்வேறு அம்சங்களை கர்த்தர் மீட்டுத்திருப்பிக்கொண்டிருந்துள்ளார். 1922-ல், வாச்மென் நீயும், வேறு சிலரும் தங்கள் பிரிவினையான கிறிஸ்தவ குழுக்களை விட்டு, தங்கள் உள்ளூரில் உள்ள சபையாக ஒருமையின் தளத்தில் கூடிவர ஆரம்பித்தபோது, கர்த்தருடைய மீட்டுத்திருப்புதலில் ஒரு பெரிய திருப்பம் ஏற்பட்டது. பார்ப்பதற்கு சிறிய நிகழ்வுபோல தோன்றிய இது, கர்த்தருடைய மீட்டுத்திருப்புதலில் ஒரு மாபெரும் புதிய ஆரம்பமாக இருந்தது. பாபிலோனிலிருந்து எருசலேமுக்கு திரும்பிவருவதைப்பற்றிய முன்னடையாளத்தின் நிறைவேற்றத்தை இது ஆரம்பித்தது. அந்நேரம்முதல், அசலான ஒருமையின் தளத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட சபைவாழ்க்கைக்கு அநேகர் திரும்பக்கொண்டுவரப்பட்டுள்ளார்கள். திரும்பிவந்தவர்களாகிய நாம், பூமியில் தேவனுடைய வாழ்விடமாக நடைமுறையாகவும் ஜீவாதாரமாகவும் கட்டியெழுப்பப்பட்டுக் கொண்டிருக்கிறோம். ஆவியிலும் ஒருமையிலும் தம்மை அனுபவித்துமகிழ்ந்து பூமியில் தம்மை வெளியாக்குகிற மக்கள் தேவனுக்கு இருக்கிறார்கள்! இவ்விதமாக, கர்த்தர் தம் கூட்டு வெளியாக்கத்தை மீண்டும் பூமியின்மீது பரப்புகிறார். இந்த வெளியாக்கத்திற்காக கர்த்தர் நம்மை ஆதாயப்படுத்தியிருக்கிறார் என்பதற்காக கர்த்தரை துதியுங்கள்!*

## IV.இன்று நாம் கர்த்தருடைய மீட்டுத்திருப்புதலில் இருக்கிறோம்

*நாம் இன்று நிற்பது, பல யுகங்களாக நடந்த போராட்டத்தின் விளைவாகும். இப்போது நாம் அனுபவித்துமகிழ்கிற மீட்டுத்திருப்புதலின் நிலையை நாம் வந்தடையுமாறு, பலர் தங்கள் வாழ்வையும் தியாகம்செய்திருக்கிறார்கள். நம்மை இந்த கட்டத்திற்கு கொண்டுவர தேவன் படிப்படியாக கடந்துசென்றிருக்கிறார். பின்னடைவுகள் இருந்திருக்கின்றன, ஆனால் தேவன் தம்மை தேடுகிற மீதியானோரை முன்னோக்கி கொண்டுவர எப்போதும் வழியை கண்டடைந்துள்ளார். இப்போது, இந்நாட்களில், தேவனுடைய தெய்வீக வெளிப்பாட்டின் உன்னத சிகரத்தைப்பற்றிய தரிசனத்தை நாம் பெற்றிருக்கிறோம். யுகங்களின் முடிவு நம்மிடம் வந்திருக்கிறது. தேவனுடைய குறிக்கோளின் நிறைவேற்றத்திற்காக நம்மை தருவதோ, அல்லது மற்ற காரியங்களுக்கு நம்மை தருவதோ நம் கையில்தான் இருக்கிறது. தேவன் தம் குறிக்கோளை நிறைவேற்றுவார், ஏனென்றால் அவர் மீட்டுத்திருப்புதலின் தேவன். நாம் அவருடன் ஒத்துழைக்கிறவர்களாக இருப்போமா? அல்லது, அதிக பசியுடனும், பாராட்டுகிறவர்களாகவும் இருக்கிற வேறு யாரிடமாவது அவர் செல்லவேண்டியிருக்குமா? கர்த்தர் தம் இருதயத்தில் உள்ளதை முழுமையாக்க நீண்டகாலம் காத்திருந்துவிட்டார். நாம் அவருக்கு தடையுண்டாக்கி, இன்னும் நீண்டகாலம் காத்திருக்கும்படி அவரை கட்டாயப்படுத்துவோமா? அல்லது நம்மில் அவர் தம் முழு வழியையும் பெறும்படி அவரை அனுமதித்து அவருடைய சந்தோஷத்தை நாம் நிறைவாக்குவோமா?*

**செயலாக்கம்:** வேதாகமம்முழுவதும் சீரழிவு, மீட்டுத்திருப்புதல் ஆகியவைகளின் தொடர்ச்சியான சுழற்சி இருந்துள்ளது என்பதை வாலிபர்கள் உணரவேண்டும்; எருசலேமை அதின் மையமாகக்கொண்ட தேசத்தைப்பொறுத்தவரை, இஸ்ரவேலின் வரலாற்றிலுள்ள மீட்டுத் திருப்புதலின் சுழற்சிகளை அவர்கள் அறிந்திருக்கவேண்டும். தேவன் தம் ராஜ்யத்திற்காக

தேர்ந்தெடுத்த விசேஷமான இடத்திலிருந்து இஸ்ரவேல் மக்கள் கொண்டுசெல்லப்பட்டார்கள். அவர் தம் குறிக்கோளை அவர்களிடம் நிறைவேற்றுவதாக வாக்களித்திருந்தார், எனவே அவர் அவர்களுக்கு வாக்களித்ததும், தமக்காக தெரிந்துகொண்டதுமான இடத்திற்கு அவர்களை திரும்ப கொண்டுவரவேண்டியிருந்தது. அவர் அவர்களை திரும்ப கொண்டுவந்தார், தேவன் தேர்ந்ததெடுத்த அசலான இடத்தில் மீண்டும் அவர்கள் தொடங்கினார்கள். பொதுவான விதத்தில் இஸ்ரவேலின் வரலாறு தெளிவாக்கப்பட்டவுடன், புதிய ஏற்பாட்டு சபை வரலாற்றிலும் எப்படி அதே காரியம் நடந்துள்ளது என்பதை காண்பியுங்கள். சபை பிரிந்து, சீரழிந்து, தேவனுடைய குறிக்கோளைவிட்டு வெகு தூரம் போய்விட்டது. இப்போது, தேவனுடைய இருதயத்தில் உள்ளதை நாம் முழுமையாக்கக்கூடிய இடத்திற்கு அவர் நம்மை திரும்ப கொண்டுவந்திருக்கிறார். இந்த தளம் பல நூற்றாண்டுகளாக காலியாக இருந்துள்ளது, யாராவது வந்து, அதின்மேல் கட்ட ஆரம்பிப்பதற்கு காத்திருக்கிறது. இரண்டாம் உலகப்போருக்குப்பிறகு தங்கள் தேசத்தை மறுபடியும் ஸ்தாபிக்க இஸ்ரவேலுக்கு திரும்பிவந்த யூதர்களைப்பற்றிய எடுத்துக்காட்டை பயன்படுத்துங்கள். இஸ்ரவேல் என்னும் தனி ஆட்சி அந்தஸ்துள்ள நாட்டிற்காக அந்த நிலம் 2600 ஆண்டுகளுக்கும்மேலாக காத்திருந்தது. சபையை கட்டுவதற்கான ஒப்பற்ற தளம்கூட, நமக்காக காத்திருந்துள்ளது. ஒருமையின் அசலான தளம், எருசலேம் நகரத்தைப்போல, அதிக “களைகளால்” நிறைந்துவிட்டது. இப்போது, திரும்பிவந்துள்ள சிலர் தேவனுக்கு இருக்கிறார்கள், ஒருமையின் அசலான தளத்தின்மீது நாம் மீண்டும் ஒருமுறை சபையை கட்டுகிறோம். நாம் ஸ்தாபனங்களில் இருந்திருந்தால், ஏற்ற தளத்தின்மீது நம்மால் கட்டமுடிந்திருக்காது, ஏனென்றால் நாம் தவறான இடத்தில் இருந்திருப்போம்; ஆனால் நாம் திரும்பிவந்தவர்களின்மத்தியில் இருக்கிறோம். நாம் இந்த இடத்தில் இருப்பது என்னே ஆசீர்வாதமானது!

**சுவிசேஷ செயலாக்கம்:** மனிதன் விழுந்துபோய், தேவனைவிட்டு பிரிந்துவிட்டான், ஆகவே அவன் மாபெரும் மீட்டுத்திருப்புதலுக்கான தேவையில் இருக்கிறான். மனிதனைப்பொறுத்தவரை தேவனுக்கு மிகஉன்னதமான நோக்கம் இருக்கிறது என்று வேதாகமம் வெளிப்படுத்துகிறது, அது நம் மிக பிரம்மாண்டமான எதிர்பார்ப்புகளுக்கும் அப்பாற்பட்டது. உள்ளாகவும் புறம்பாகவும் தம்மைப்போல் இருக்கும்படி தேவன் மனிதனை உண்டாக்கினார், இதனால், இறுதியாக, மனிதன் தேவனுடைய ஜீவனை பெற்று, நித்தியத்திற்கும் மூவொரு தேவனுடன் ஜீவனில் சேர்ந்திணைந்து, சுபாவத்தில் கலந்திணைந்து, ஒன்றாக கூட்டியிணைக்கப்படக்கூடும். இருப்பினும், மனிதன் வீழ்ச்சியின்மூலம் தொலைந்துபோய், பரிசுத்தமாக இருப்பதற்குப்பதிலாக, புறம்பானவிதத்தில் தன் நிலைமையிலும், உள்ளானவிதத்தில் தன் குணத்திலும் பொதுவாகிவிட்டான். இன்றைய உலகத்தை ஒருவிசை பார்த்தால், மனிதன் முழுவதுமாக விழுந்துபோய், ஒரு மாபெரும் மீட்டுத்திருப்புதலுக்கான தேவையில் இருக்கிறான் என்று எந்த கேள்வியுமின்றி அது சாட்சிபகர்கிறது. எனவே, தேவன் முழுமையான இரட்சிப்பை ஆயத்தம்பண்ணியிருக்கிறார். தேவன் தம் முழுமையான இரட்சிப்பில், கிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால் சட்டரீதியாக நம் நிலைமையில் நம்மை பரிசுத்தமாக்குகிறார் (எபி. 13:12), தேவனுடைய பரிசுத்த சுபாவத்தைக் கொண்டு பரிசுத்த ஆவியானவரால் ஜீவாதாரமாக நம் குணத்தில் நம்மை இரட்சிக்கிறார் (ரோ. 15:15). நீண்டகாலமாக, மனிதன் தேவனைவிட்டு பிரிக்கப்பட்டிருக்கிறான், அவன் எதை உள்ளடக்கி, வெளியாக்கவேண்டுமென்று ஒரு பாத்திரமாக சிருஷ்டிக்கப்பட்டானோ, அந்த தெய்வீக உள்ளடக்கம் இல்லாதிருக்கிறான். இப்போது, மனிதன் தேவனுடைய முழுமையான இரட்சிப்பை பெற்றுக்கொள்வதின்மூலம், தன் சீரழிந்த நிலைமையிலிருந்து முழுவதுமாக மீட்டுத்திருப்பப்பட்டு, தேவனுடைய தெய்வீக குறிக்கோளை அவர் அடையுமாறு அவரிடம் மீட்டுத்திருப்பப்படமுடியும். இவ்வளவு பெரிதான இரட்சிப்பை நாம் அலட்சியம்பண்ணாமல் இருப்போமாக (எபி. 2:4).

**முக்கியமான விஷயங்கள்:** வேதாகமத்தில் உள்ள வரலாற்று நிகழ்வுகளின் முன்னேற்றத்தை அறிந்துகொள்ளுதல் (I.C.), தேவனுக்கு ஒரு குறிக்கோளும் பொருளாட்சியும் இருக்கிறது என்பதை அறிந்துகொள்ளுதல் (II.A.2.); கர்த்தருடைய மீட்டுத்திருப்புதலுக்கும் கிறிஸ்தவத்திற்கும் இடையே உள்ள வித்தியாசம் (II.E.I.).

**பின்புல வாசிப்புக்காக:** *Life-study of Ezra*, Message 1; *Concerning the Lord’s Recovery*, Chapter 1.

**ஒப்பீடுகள்:** *The Living and Practical Way to Enjoy Christ*, Messages 7-8; *Life-study of Joshua*, Message 15; *Life-study of 1 & 2 Chronicles*, Message 12; *Life-study of Ezra*, Message 1; *The Recovery of God's House and God's City*, Chapters 2-3, 7-8; *Concerning the Lord's Recovery*; *Truth Lessons,* Level One, Volume 1, Lessons 11-12; *Truth Lessons,* Level One, Volume 2, Lesson 13; *The Genuine Ground of Oneness*, Chapters 3-5, 8-10; *The Vision of God's Building*, Chapters 11-12; *The Practical Expression of the Church*, Chapter 6; *Young People's Training*, Messages 2, 8, 12.